DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.301/2020**

| | | |
|---|---|---|
| Name | : மக்தூம் | **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of November 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை. அந்த புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்து எதுவும் செய்யவில்லை. குற்ற வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. விபத்து நடந்தஇடத்திற்கு எதற்காக சென்றேன் என்பதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு ரஷீம் என்பவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல லாரியை எந்த வித சமிஞ்ஞையும் இல்லாமல் நடுரோட்டில் நிறுத்தி

வைத்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்று கூறுவது சரியல்ல. நின்றுகொண்டிருந்த லாரியின் பின்னால் பைக் மோதியதில் விபத்து ஏற்பட்டிருக்கிறது. நான் செல்லும் போது விபத்து நடந்துவிட்டது. அவர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்று நான் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் நான் இருக்கவில்லை என்றும், விபத்தில் இறந்த நபர் என்னுடைய உறவினர் என்பதால் சம்பவம் நடந்த இடத்தில் இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சம்பவ இடத்தில் இல்லாததால் தான் காவல்துறை ஆவணங்களில் நான் சாட்சியாக கையெழுத்திடவில்லை, புகாரும் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த ரோடு அகலமான ரோடு என்றால் சரிதான். லாரி நின்றிருந்த இடத்தைத் தாண்டி பைக் செல்வதற்கும் இடம் இருந்தது என்றால் சரிதான்.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.11.08 16:24:20 +0530